# நிலாவின் நூலகம் -7

***இலங்கை மக்களை ஏமாற்றாதே...***
***இலங்கை மக்களே ஏமாறாதீர்கள்...***

*08-April-2024*

மீள்பதிவு

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது.

இலங்கை மக்களை ஏமாற்றாதே
இலங்கை மக்களே ஏமாறாதீர்கள்

அனைவருக்கும் வணக்கம்...
இலங்கையில் உள்ள சிங்கள மக்களும் அரசும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இயங்குவார்களா?

இலங்கையில் உள்ள சிங்கள மக்களை கீழ்வரும் அடிப்படையில் பிரிக்க முடியும்.
1) வலதுசாரி சித்தாந்தவாதிகள்
2) இடதுசாரி சித்தாந்தவாதிகள்
3) பௌத்த மகா சங்கங்கள்
4) ஊடகங்களும் சிங்கள அறிஞர்களும்
5) இராணுவம்

**1) சிங்கள வலதுசாரிகள்**

மேற்குறித்த இந்த ஐந்து வகையினரில் சிங்கள மக்களை அடக்க முடியும். இவர்களில் வலதுசாரிகள் கடந்த 73 வருடமாக தமிழ்மக்களுக்கு நீதியான தீர்வை வழங்காமல் காலவிரயம் செய்வதும் தமது அரசியல் நாற்காலிக்கு நெருக்கடிகள் அல்லது ஆபத்து வரும்போது ஒப்பந்தங்களை போட்டு தம்மை நிலைப்படுத்திக்கொண்டு பின்னர் ஒப்பந்தங்களை கிழித்து எறிவதுமே வரலாற்றில் உள்ள உண்மை சம்பவங்களாகும்.சிங்கள வலதுசாரிகளில் இரண்டு வகையானவர்கள் உண்டு கண்டி சிங்கள உயர்குல வலதுசாரி சிந்தனையாளர்கள், கரையோர சிங்கள வலதுசாரி சிந்தனையாளர்கள் .இவர்கள் தமது அரசியல் நாற்காலியை காப்பாற்றிட காலனித்துவ காலத்தில் கிறித்தவ மதத்தை தழுவி அரசியல் நாற்காலியை காப்பாற்றிக்கொண்டதை அவதானிக்கலாம்.(இதற்கு தமிழ் வலதுசாரிகளும் விதிவிலக்கில்லை)

## 2) சிங்கள இடதுசாரிகள்

இவர்கள் முதலாம் உலக யுத்தத்தின் போது விழுப்புண் அடைந்த மக்களுக்காகவும் இராணுவ வீரர்களையும் கவனத்தில் கொண்டு மக்களின் நலனை நோக்கி யுத்தத்தை எதிர்த்து இடதுசாரியத்தை முன்வைத்து மக்களின் எழுச்சி மக்களிற்கான வாழ்வியல் மேம்பாடு அடக்கப்படுகின்ற மக்களின் காலனித்துவ விடுதலை போன்றவரை முன்வைத்து தோற்றம் பெற்றார்கள் .இவர்களிடம் மனித நேயமும் மனித மாண்பும் மனித அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்து எழவேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கி இருந்தது .இவர்கள் சாதிய மத,தேசிய வேறுபாடுகளை கடந்து மக்களுக்காக மக்களை நேசித்தார்கள் .இவர்களின் சித்தாந்தத்தில் மொழிக்கு முன்னுரிமை கொடுத்தார்கள் ,ஏனெனில் மொழியே ஒரு மனிதனின் வாழ்வியலின் நெறிமுறையை தோற்றுவிக்கின்றது என்ற சிந்தனை இவர்களிடம் மோலோங்கி இருந்தது .1930 களில் இலங்கையில் இரண்டு மொழிகள் உண்டு என்றும் தமிழ்மக்களின் தமிழ்மொழிக்கு மிகப்பெரிய தொன்மையும் பெருமையும் உண்டு என இலங்கை நாடாளுமன்றில் நாடாளுமன்றமே அதிர பேசினார்கள் .

துரதிஷ்ட வசமாக இரண்டாம் உலகப்போரின் போது இனவழிப்பிற்கு எதிரான யுத்தம் நிகழ்கின்றது என கூறியே இரண்டாம் உலகப்போரை இடதுசாரிகளில் ஒரு பகுதியினர் ஆதரித்தனர், ஒரு பகுதியினர் எதிர்த்தனர். இதன்போது இடதுசாரிகளுக்குள் பிளவு ஏற்பட்டது .முதன் முதலில் ரஷ்ய காமினிஸ்ட என்றும் சீன காமினிஸ்ட் என்றும் இரு குழுவினர் உருவாகினர். இதிலும் கொடுமை என்னவென்றால் இவர்கள் எவரும் தமது நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களுக்காக தமக்குள் பிரியவில்லை .தமது நாட்டிலும் அண்ணளவாக் 5000 கிலோமீற்றர் தொடக்கம் 10000 கிலோமீற்றர் தூரமுள்ள ஆசிய நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட மோதல்களுக்காக தமக்குள் தாமே பிரிந்துகொண்டார்கள்.

இதிலிருந்து இடதுசாரிகளின் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட ஒரு தொகுதியினர் அரசியல் நாற்காலி மோகங்களில் தனிப்பட்ட நலனுக்காக செயற்பட ஆரம்பித்தனர். குறிப்பாக பிலிப் குணவர்த்தன போன்றோர் 1955 களில் தனி சிங்கள சட்டத்திற்கு ஆதரவாக பேச ஆரம்பித்தனர்.சிங்கள இடதுசாரிகள் குவிந்து வாழ்கின்ற களனி நகர்களில் 1955 களில் தனிச்சிங்கள சட்டத்திற்கு ஆதரவாக பலமாக பிரச்சாரங்களை சிங்கள இடதுசாரிகளுடன் இணைந்து வலதுசாரிகள் மேற்கொண்டார்கள்.

சண்முகதாசன் தலைமையில் சீன கொமினிஸ்ட் தோற்றம்பெற அதில் ரோஹண விஜயவீர, மைத்திரி சிறிசேன போன்றோரும் சமல் ராஜபக்ச போன்றோரும் முன்னணியில் நின்றார்கள்.இருந்தும் சண்முகதாசன் அவர்கள் புரட்சிக்கு தயாராக இல்லையயன்று உணர்ந்த ரோஹன விஜயவீர அவர்கள் சண்முகதாசன் அவர்களில் இருந்து பிரிந்து மீண்டும் தமிழர்களுக்கு எதிராக 1968 களில் தொழிற்பட ஆரம்பித்ததுடன் இந்தியாவின் முகமாகவே தமிழர்களை சித்தரித்து தமிழ்மக்களுக்கு எதிரான வன்மத்தை சிங்கள மக்களிடம் விதைத்தார்.

1960 களில் தமிழ் வலதுசாரி தலைமைகள் சிங்கள இடதுசாரிகள் எண்ணிக்கொண்டதற்கு மாறாக சிங்கள வலதுசாரிகளுடன் இணைந்து செல்வநாயகம் அவர்கள் அரசமைத்ததனால் சிங்கள இடதுசாரிகள் முற்று முழுதாக தமிழ்மக்களுக்கு எதிராகவே திசை திரும்பினார்கள்.
சிங்கள இடதுசாரிகள் இந்தியாவிற்கு எதிராக பேசியதை காரணமாக காட்டி இந்தியாவின் உதவியுடன் சிங்கள இடதுசாரிகளை சிங்கள அரசு அடக்கி ஒடுக்கி இல்லாது ஒழித்தார்கள் (ஜேவிபி புரட்சியை ஒடுக்கியமை).
இதனால் இந்தியாவிற்கு எதிரான கொள்கைவாதம் சிங்கள இடதுசாரிகளிடம் அதிகரித்ததுடன் இயல்பாகவே இந்திய எதிர்ப்புவாதத்தை அடிமனதில் ஆழமாக புதைத்து வைத்துள்ள சிங்கள அரசும் இந்த இடந்துச்சாரிகளை காலத்திற்கு காலம் தமக்கு சாதகமாக பயன்படுத்தினார்கள்.
இவர்களில் இன்றும் உயிரோடு உள்ளவர்களில் சிலர் வருமாறு (சிங்களவர்கள் மட்டும்)

**a) தயான் ஜயதிலக்க**

1980 களில் ஜெ ஆர் ஜெயவர்தனவால் வளர்க்கப்பட்ட இடதுசாரி கொள்கையாளனாக தன்னை அடையப்படுத்தி இருந்தவர்.
ஈ பி ஆர் எல் எப் மத்திய குழு உறுப்பினராகவும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆதரவாளனாகவும் தமிழீழ விடுதலை குழுக்கள் அனைத்துடனும் நெருக்கமாக பயணித்த ஒருவர் .இவர் இனவழிப்பு யுத்தம் முடிவடைந்த பின்னர்
மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கையில் நிகழ்ந்த யுத்தத்தின்போது ''0 casulity'' என்று தொண்டைகிழிய பேசி இலங்கையில் இனவழிப்பு நிகழவில்லை என  சர்வதேச நாடுகளுக்கு பிரச்சாரம் செய்த நபர் .இவரால் எழுதப்படும் சிங்கள ஊடக செய்திகளை இன்றும் விரும்பி படிக்கின்ற ஈழத்தமிழர்கள் உள்ளார்கள் என்பதுதான் கள யதார்த்தம்.இவர்களுக்கு யார் யார் எவ்வாறாக பயணிக்கின்றார்கள் என்கின்ற ஆழமாக அறிவியலதேடலற்ற நிலையில் தாமும் சிங்கள அரசின் நிகழ்ச்சிநிரலுக்குள் விழுந்து ஈழத்தமிழர்களையும் சிங்கள அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்க வைக்கின்றார்கள் .

**b) மைத்திரி சிறிசேன**

இடதுசாரி கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு 1968 களில் ரோஹண விஜயவீராவின் ஆர்ப்பாட்டங்களில் முன்னணி நின்று போலீசாரிடம் அடிவாங்கி சிறைசென்று வந்தவர் பின்னர் சுயநல அரசியலுக்காக அரியணை எற வலதுசாரியாக மாறி தொடர்ச்சியாக நல்லாட் சி என்கின்ற சிங்கள அரசின் நாடக பாத்திரத்தில் அரியணை ஏறியவர் .

**c) பசில் ராஜபக்ச**

ஆரம்பங்களில் இடதுசாரி கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு பின்னர் 1981 களில் ஜெ ஆர் கட்சிக்கு தாவி இளைஞரணி தலைவராக பொறுப்பேற்று பின்னர் வலதுசாரியாக மாறியவர் . இப்போது இனவாத அரசின் முதுகெலும்பாக நின்று தமிழினத்தை அழித்துவிட துடிதுடித்து நிற்பவர்.அதுமட்டுமன்றி மலையக தமிழர்கள், ஈழத்தமிழர்களுடன் நல்லுறவை பேணிக்கொண்டு இலங்கையின் இனவழிப்பு யுத்தத்தின் பின்னர் அரங்கேறுகின்ற தொல்லியல் இடங்களின் கைப்பற்றுகை, சிங்கள குடியேற்றம், இந்துக்கலாச்சார திணைக்களத்தை இல்லாமல் செய்தமை, கடற்கரையோர நில அபகரிப்புகள் என தொடர்ச்சியாக ஈழத்தமிழருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுகின்ற நபராவர். இவர்மீதான நிதிமோசடி வழக்குகள், 2009 பின்னர் மீள்குடியேற்ற காலத்தில் முஸ்லீம் அரசியல்வாதிகளுடனும், விடுதலைப்போராட்டத்தின் பெயரை சொல்லிவிட்டு பின்னர் தடம்மாற்றி சிங்கள இனவாத அரசுடன் இணைந்து செயற்படுகின்ற நபர்களுடனும் இணைந்து (ரிஷாட், ஹிஸ்புல்லா, கருணா, பிள்ளையான்) தமிழ்மக்களின் விவசாய நிலங்கள், தோட்ட நிலங்கள், இடம்பெயர்ந்த மக்களின் காணிகள், வில்பத்து காடழிப்பு என பலவேறு குற்றங்களை செய்துவிட்டும் இன்றும் தன்னை சிங்கள அரசின் இனவாதியாக வெளிக்காட்டி நிற்பவர்.

**d) வாசுதேவ நாணயக்கார**

1994 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை வலதுசாரிகளுடன் இணைந்து நாடாளுமன்ற /அமைச்சர் பதவிகளை பெற்று சுயநல அரசியலில் ஈடுபடுகின்ற நபர் இடதுசாரியாக இருந்து இப்போது வலதுசாரிகளுடன் இணைந்து பயணிப்பவர்.

இவ்வாறாக இடதுசாரிகள் பெரும்பான்மையாக அரச உத்தியோகங்களையும் சுகபோகங்களையும் பெற்றுக்கொள்ள இடதுசாரி கொள்கைகளை கைவிட்டு விட்டு வலதுசாரிகளுடன் இணைந்து சுகபோக சுயநல அரசியலை செய்கின்றார்கள். இந்த உண்மையை சரியாக தமிழ்மக்களுக்கு எடுத்து கூறாமல் இடது சாரிகளுடன் இணைந்து தமிழ்மக்களுக்கு தீர்வினை பெற்றுத்தரப்போவதாக பல இடதுசாரிக்கொள்கை கொண்ட தமிழர்கள் கூறுவது வேடிக்கையானது இவர்களின் இந்த நடவடிக்கையானது மறைமுகமாக சிங்கள அரசிற்கு

அதாவது வலதுசாரிகளுக்கு சேவகம் செய்வதாகவே இவர்களின் நடவடிக்கைகள் அமையும். வரலாற்றை ஆழமாக பகுப்பாய்வு செய்தால் இலங்கையில் உள்ள சிங்கள இடதுசாரிகளின் வரலாறு 1965 களின் பின்னர் தமிழ்மக்களுக்கு எதிரான கருத்துக்களையே விதைப்பதையே அவதானிக்கலாம்.

### 3) பௌத்த மகா சங்கங்கள்

''தம்மதீப'' கோட்பாட்டினை உருவாக்கியவர்களே இந்த மகாசங்கங்கள் தான்.

''தம்மதீப'' கோட்பாட்டில் சொல்லப்பட்ட

*இலங்கை என்ற தீவானது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது எனவும்

*சிங்கள மொழியே இலங்கையின் மொழி எனவும்

*பௌத்தர்கள் மட்டுமே இலங்கைக்கு சொந்தமானவர்கள் எனவும்

*விஜயனே இலங்கையின் முதல் மன்னன் என்றும் விஜயனின் வழி வந்தவர்களே சிங்களவர்கள் எனவும் ஆழமாக சிங்கள மக்களின் மனதில் கருத்துருவாக்கத்தை செய்கின்றார்கள்,இந்த பௌத்த மகாசங்கங்களை சார்ந்தவர்கள் இலங்கையில் உள்ள தமிழர்களை அழிக்க இராணுவ தளபதிகளுக்கும் விசேட பூஜைகளை செய்து போருக்கு அனுப்புகின்ற மனநிலை கொண்டர்வர்களாவும் உள்ளார்கள்.பௌத்த மகாசங்கங்களும் தமிழ்மொழி பேசுகின்ற மக்களுக்கு எதிரான கருத்துக்களையே எழுதியும் பேசியும் வருகின்றார்கள். தமிழ்மக்களில் மதரீதியாக இஸ்லாமிய , கிறிஸ்தவ ,சைவ மக்கள் என்கின்ற வேறுபாடு இருந்தாலும் தமிழ்மொழி பேசுகின்ற அனைவரையும் இலங்கை தீவில் இருந்து அழித்து ஒழிக்கவேண்டும் என்ற கோட்பாட்டில்தான் சிங்கள ஊடகங்களும் சிங்கள அறிஞர்களின் கருத்துக்களும் அமைகின்றது .

### 4) ஊடகங்களும் சிங்கள அறிஞர்களும்

இவர்களும் ''தம்மதீப'' கோட்பாட்டினை ஆழமாக உள்வாங்கிக்கொண்டு தமிழ்மொழி பேசுகின்ற மக்களுக்கு எதிரான கருத்துக்களையே எழுதியும் பேசியும் வருகின்றார்கள். பௌத்த மகாசங்கங்கள் சொல்கின்ற கருத்துக்கு கட்டுப்பட்டு பௌத்த மகாசங்களின் கருத்துக்களுக்கு வலுசேர்க்கும் முகமாக 99 வீதமான சிங்கள புத்திஜீவிகளும் சிங்கள ஊடகங்களும் கருத்துக்களை சிங்கள மக்களுக்கு விதைக்கின்றார்கள் . இத்தகைய வெளிப்பாட்டின் எதிரொலியை இறுதி யுத்தத்தின் போது இலங்கை தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் இனவழிப்பு செய்யப்பட்டபோதும் இனவழிப்பினை போற்றியும் புளகாங்கிதம் அடைந்தும் கொண்டாடியும் சிங்கள ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டனர். அதுமட்டுமன்றி இனவழிப்பு செய்த இராணுவத்தினை

முடிசூடா மன்னர்களாகவும் யுத்த வீரர்களாகவும் போற்றியும் சிங்கள இராணுவங்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும் சர்வதேச நாடுகளுடன் இலங்கை அரசு மேற்கொள்கின்ற இராசதந்திர நிகழ்வுகளுக்காக பலவேறு பொய்களையும் புனைவுகளையும் உண்மைக்கு புறம்பாக செய்திகளையும் வெளியீடு செய்து சிங்கள அரசை காப்பாற்றியும் வருகின்றார்கள். சுருக்கமாக கூறின் ஊடகங்களின் நடுநிலையை கேள்விக்குறியாக்கி சிங்கள அரசின் அநியாயங்களுக்கு அக்கிரமங்களுக்கும் ஊதுகுழல்களாக மாறியுள்ளார்கள்.

**5) இராணுவம்**

சிங்கள அரசின் விருப்பை நிறைவேற்றுகின்ற தமிழ்மொழி பேசுகின்ற மக்களை அழித்து ஒழிகின்ற பணியை தொடர்ச்சியாக செய்துவருகின்ற கருவிகளாகவே சிங்கள இராணுவம் உள்ளது,இவர்களும் ஒருபோதும் எந்த சந்தர்ப்பத்திலும் தமிழ்மக்களுக்கு ஆதரவு நிலையினை எடுக்க மாட்டார்கள்.இதுவே கடந்தகால வரலாற்றின் பக்கங்களில் உள்ள உண்மையாகும்.

இத்தகைய இந்த கடினமான பக்கங்களை ஆழமாக உணர்ந்துகொண்டு இன்றைய சூழ்நிலையில் ஈழத்தமிழர்கள் அனைவரும் இணைந்த ஒரு சரியான அரசியல் நகர்வை முன்னெடுத்துச் செல்லவேண்டும் .அதாவது இலங்கையில் உள்ள களநிலவரத்தை புரிந்துகொண்டு சர்வதேசத்தை எவ்வாறு அணுகி யாருடன் கூட்டிணைந்து ஈழத்தமிழர்களின் அரசியல் ரீதியான சனநாயக உரிமையை வென்று எடுக்கவேண்டும் என தீர்மானிக்க வேண்டும். அதனை விடுத்து ஈழத்தமிழ்மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்குவதும்,இலங்கையில் உள்ள ஜே வி யினர் தமிழர்களின் உரிமையை வென்றெடுத்து தருவார்கள் என்று கூறுவதும் அபத்தமானது.

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமையை வென்றெடுக்க வேண்டிய நிலையில் தேவையற்ற முரணான கருத்துக்களை பதிவுசெய்வதும் தமிழ்மக்களை திசைதிருப்பி சிங்கள அரசின் நிகழ்ச்சிநிரலுக்குள் சிக்கிக்கொண்டு ஈழத்தமிழர்களின் அரசியல் இருப்பை கேள்விக்குறியாக்கியாக்குவதும் ஈழத்தமிழர்களுக்கு ஈழத்தமிழர்களே செய்கின்ற அநியாயமாகவே அமையும்.

காவியா
10:02
பெரியபிரித்தானியா
15/02/2022